**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.) Under Section 173 BNSS C
(குற்றவி.நடைமுறை சட்டம் பிரிவு 154-ன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8109723

1. District : அரியலூர் மாவட்டம் | PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 03/25 மு.த.அ. எண் | Date: 23.04.25 நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988) Sections பிரிவுகள்: U/s 7(b)
   (ii) Act சட்டம்: — (as amended in 2018) Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 22.04.25 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.04.25 | Time : நேரம் 07.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.04.25 | Time : நேரம் 07.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ எழுத்துமூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் தெற்கே 60 Km
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் பாப்பாக்குடி (மேற்கு) கிழக்கே
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் சுகுமார் | (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் ராஜ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55/25 | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி வடக்குத்தெரு, பாப்பாக்குடி, உடையார்பாளையம் (Tk)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   செல்வராசு, கிராம நிர்வாக அலுவலர், பாப்பாக்குடி (மேற்கு)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனியே இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 23/4/2025 | [signature] 23.04.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 23-04-25 at 10.30 hrs

Name: பெயர் இ. கவிதா
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ………

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3 16(HCL-12)p.2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது**

**அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 03/2025 முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-க்கான இணைப்பு:-**

23.04.2025-ம்தேதி காலை 07.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், பாப்பாக்குடி, வடக்குத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் ராசு என்பவரது மகன் திரு.ரா.சுகுமார் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்: ரா.சுகுமார், வயது 55, த/பெ. ராசு, வடக்குத்தெரு, பாப்பாக்குடி, உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம். செல்-9715945227. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அம்மா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு மூன்று மகன்கள் உள்ளனர். எனது தம்பி சுரேஷ் சுமார் 2 ஆண்டுகளாக சிங்கப்பூரில் வேலை பார்த்து வருகிறார். பாப்பாக்குடி தெற்கு கிராம சர்வே எண். 326/7-ல் உள்ள 67.00 ஏர்ஸ் நிலத்தில் 31.50 ஏர்ஸ் நிலத்தினை கலியபெருமாள் என்பவரிடமிருந்து வாங்கி எனது தம்பி சுரேஷ் பெயரில் மீன்சுருட்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு எண். 194/1997-ன்படி பத்திரம் பதிவு செய்தோம். அதே சர்வே எண்ணில் 21.00ஏர்ஸ் நிலத்தினை அண்ணாதுரை என்பவரிடமிருந்து வாங்கி எனது தம்பி சுரேஷ் பெயரில் மீன்சுருட்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு எண். 663/2014-ன்படி பத்திரம் பதிவு செய்தோம். மேற்படி நிலங்கள் எனது தம்பி பெயருக்கு பட்டா மாறாமல், விற்பனை செய்தவர்களின் பெயர்களிலேயே இருந்தது. எனது தம்பி மனைவி பபிதா என்னிடம் மேற்படி நிலத்தினை எனது தம்பி பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய வேண்டும் என்று சொன்னார். அதன்படி நான் மேற்படி நிலத்தினை எனது தம்பி சுரேஷ் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து தருமாறு பாப்பாக்குடி தெற்கு VAO திரு.செல்வராசு அவர்களிடம் கேட்டேன். அப்போது அவர் பிறகு பார்க்கலாம், நான் உங்க கிட்ட பேசுகிறேன் என்று சொன்னார். பிறகு கடந்த 23.01.2025 அன்று VAO செல்வராசு அவரது செல்போன் நம்பர் 9080979558-ல் இருந்து எனது செல்போன் நம்பர் 9715945227-க்கு தொடர்பு கொண்டு உங்க தம்பி பெயரில் உள்ள நிலத்தோட பத்தரத்தை கொண்டு வந்து கொடுங்க, பட்டா மாத்திடலாம் என்று சொன்னார். விவசாய வேலை காரணமாக நான் அவரை நேரில் பார்க்க முடியவில்லை. பிறகு 17.02.2025 அன்று VAO-வை நான் செல்போனில் தொடர்பு கொண்டபோது, நான் வெளியில் இருக்கிறேன், 2 நாட்கள் கழித்து ஆபீஸ்ல வந்து பாருங்க என்று சொன்னார். பிறகு 28.02.2025 அன்று எனது தம்பி சுரேஷ் பெயரில் இருந்த பத்திரத்தின் நகல்களை எடுத்துக்கொண்டு பாப்பாக்குடி தெற்கு VAO அலுவலகத்திற்கு நேரில் சென்று VAO திரு.செல்வராசு அவர்களை பார்த்து பட்டா மாற்றம் செய்து கொடுக்கும்படி கேட்டேன். அப்போது அவர் பத்திரத்தை வாங்கி பார்த்துவிட்டு உட்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்வதற்கு இ.சேவை மையத்தில் ஆன்லைனில் அப்ளை செய்யனும், அதற்கு ரூ.2000/-ம் பணம் கட்றமாதிரி இருக்கும், நீங்க அலைய வோண்டாம்னு நினச்சிங்கன்னா எங்கிட்ட பத்திரத்தையும், பணத்தையும் கொடுங்க நான் அப்ளை செஞ்சி சர்வேயர்கிட்ட சொல்லி உங்க வேலையை முடிச்சி குடுத்துடுறேன் என்று சொன்னார். அதனால் நான் அவரிடமே ரூ.2000/-ம் பணத்தையும், பத்திரத்தையும் கொடுத்தேன். பிறகு எனது செல்போனுக்கு 28.02.2025ம்தேதி விண்ணப்ப எண். 2025/0105/17/166132-ன்படி விண்ணப்பம் செய்யப்பட்டதற்கான மெசேஜ் வந்தது. அதன்பிறகு 28.03.2025 அன்று சர்வேயர் என்னை பார்த்து பட்டா மாற்றத்திற்கு அப்ளை பன்னிருக்கீங்களா என்று கேட்டார். நான் ஆமாம்,

எனது தம்பி பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய VAO மூலமாதான் அப்ளை பன்னிருக்கோம் சார் என்று சொன்னேன். சரி நான் VAO கிட்ட பேசிக்கிறேன் என்று சொல்லிவிட்டார். அன்னைக்கே பட்டா மாற்றம் செய்யப்பட்டதாக எனது செல்போனுக்கு மெஸ்சேஜ் வந்தது. அதன்பிறகு VAO செல்வராசு என்னை பார்த்து நீங்க கேட்ட மாதிரி உங்க தம்பியோட நிலத்தை உட்பிரிவு செய்து எண்.326/7B-ல் 52.50 ஏர்ஸ் நிலத்தையும் தனிப்பட்டாவா மாத்தியாச்சி, சர்வேயர், தாசில்தார் எல்லாத்துக்கும் பணம் கொடுக்குற மாதிரி இருக்கும், நான் எவ்வளவுன்னு சொல்றேன் என்று சொன்னார். அதன்பிறகு 21.04.2025 அன்று பாப்பாக்குடி தெற்கு VAO திரு.செல்வராசு அவர்கள் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு ஆபீஸ்ல வந்து என்னை பாருங்க என்று சொன்னார். நான் வெளியில வேலையா இருக்கேன், நாளைக்கு வந்து பாக்குறேன் சார் என்று சொன்னேன். பிறகு நேற்று 22.04.2025ம்தேதி காலை நான் VAO-வை எனது செல்போனில் இருந்து தொடர்பு கொண்டு பேசியபோது அப்ளை பன்னதுக்கு 2000/-ம் கொடுத்துட்டீங்க, பட்டா மாற்றம் செஞ்சதுக்கு ரூ.8000/-ம் கொண்டுவந்து கொடுத்துட்டு, பட்டா காப்பிய வாங்கிக்குங்க என்று சொன்னார். என்ன சார் 8000/-ம் கேக்குறீங்க என்று நான் கேட்டதற்கு, உங்கள அலையவிடாம நானே உங்க வேலைய முடிச்சிக்குடுத்துட்டேன், எல்லா ஆபீசருக்கும் கொடுக்கனும், அதனால நீங்க நாளைக்கு ரூ.8000/-ம் பணத்த ரெடிபண்ணிக்கிட்டு ஆபீஸ்ல வந்து என்ன பாருங்க என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை என்றாலும் வேறு வழியின்றி அப்போதைக்கு சரிங்க சார் என்று சொன்னேன். பின்னர் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து பாப்பாக்குடி தெற்கு VAO திரு.செல்வராசு என்பவர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.8000/-த்தை ரெடிப்பண்ணிக்கொண்டு வந்துள்ளேன். என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட பாப்பாக்குடி தெற்கு VAO திரு.செல்வராசு என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd.) (ஆங்கிலத்தில் ஒப்பம் தேதி 23.04.2025). Sir, Received this computerised complaint from the complainant on 23.04.2025 at 07.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 23.04.2025 at 08.00 hrs in Ariyalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.03/2025, U/s 7(b) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) B.Kavitha, Inspector of Police, V&AC, Ariyalur.

23.04.25

**Inspector of Police,**
**Vigilance and Anti-Corruption,**
**Ariyalur.**

I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Specital Judge, Ariyalur and the copies of the F.I.R to all other concerned Officials.

23.04.25

**Inspector of Police,**
**Vigilance and Anti-Corruption,**
**Ariyalur.**